4. திரு. எம். ஆர். கண்ணன்.
5. திரு. கா. வேழவேந்தன்.
6. திரு. ஏ. சி. நரசிம்மன்.
7. திரு. க. ந. சிவபெருமாள்.
8. திரு. ஈ. எம். நடராசன்.
9. திரு. அ. லெ. சுப்பிரமணியம்.
10. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
11. திரு. பி. வேலுசாமி.
12. திரு. கே. என். குமாரசாமி.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1967–68-ம் ஆண்டு உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பின முதல்வர், (லீடர் ஆஃப் தி ஹவுஸ்) அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், துணைச் சபாநாயகர் அவர்களும் தங்கள் தங்கள் அலுவல் காரணமாக, எக்ஸ் அஃபிஷியோ, குழு உறுப்பினர்களாவர். இந்தப் பேரவை 183 (4)-வது விதிக்கிணங்க துணைச் சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்களை இந்தக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(இ) பேரவை உறுப்பினர் வசதிக் குழுவிற்கான தேர்தலும், நியமனமும்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: 1967-68-ம் ஆண்டுக்கான பேரவை உறுப்பினர் வசதிக் குழுவிற்கு, ஹவுஸ் கமிட்டிக்கு, இந்தப் பேரவையில் 11 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட 11 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்களாவன:—

1. திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
2. திரு. கே. பி. எஸ். மணி.
3. திரு. ரா. ராமச்சந்திர துரை.
4. திரு. ஆர். கருப்பையா.
5. திரு. கோ. பாரதி மோகன்.
6. திரு. டி. ஏ. ராஜவேலு.
7. திரு. என். கிட்டப்பா.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. அ. கிருஷ்ணன்.
10. திரு. பு. செ. முத்துச்செல்வன்.
11. திரு. டி. தங்கப்பன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந் தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1967–68-ம் ஆண்டு உறுப்பினர் வசதிக் குழுவிற்கு இவர் கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாக நான் அறிவிக் கிறேன். இந்தப் பேரவை 221 (1) விதிக்கிணங்க திரு. ஜே. பெல்லி கௌடர், ஹாஜி ம. மு. பீர் முகம்மது, திரு. வை. சுவாமிநாதன். திரு. ஏ. ஆர். பெருமாள் இவர்களை இந்தக் குழு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன். துணைச் சபாநாயகர் அவர்கள் அலுவல் காரணமாக, எக்ஸ் அஃபிஷியோ, இக்குழுவின் தலைவராவர்.

(உ) பேரவை விதி குழுவிற்கு நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டசபை விதி 299 (1)-வது விதிக்கிணங்க கீழ்க் கண்ட உறுப்பினர்களை விதி முறைக் குழு, ரூல்ஸ் கமிட்டி உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்.
2. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்.
3. மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்.
4. திரு. து. ப. அழகமுத்து.
5. திரு. ஆலடி அருணா.
6. திரு. கா. வேழவேந்தன்.
7. திரு. ஈ. எம். நடராசன்
8. திரு. வெ. முனுசாமி.
9. திரு. பி. ஜி. கருத்திருமன்.
10. திரு. வ. ஜார்ஜ்.
11. திரு. க. இராமமூர்த்தி.
12. டாக்டர் எச். வி. ஹாண்டே.
13. திரு. என். வரதராசன்.
14. திரு. ஏ. ஆர் மாரிமுத்து.

பேரவைத் தலைவரான நான் என் அலுவல் காரணமாக. எக்ஸ் அஃபிஷியோ, இந்தக் குழுவின் தலைவராக இருப்பேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

* THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Madras District Municipalities (Amendment) Bill, 1967 * (L.A. Bill No. 2 of 1967) be taken into consideration."

---

* Published in the *Fort St. George Gazette*, Extraordinary dated 23rd March 1967.